W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

**EXECUTIVE DIRECTOR:**
YASMIN SOOKA

14 டிசெம்பர் 2020

**கூட்டு ஊடக அறிக்கை: தொடரும் குற்றங்கள் - மாத்தளையில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை**

**ஜொகானஸ்பேர்க்:** ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவும் அவருடைய இராணுவத் தளபதியான லெப். ஜெனரல் சவேந்திர சில்வாவும் புதிதாக வெளியிடப்பட்ட அரசாங்கப் பட்டியல்கள் மாத்தளையில் 1989 இலும் முள்ளிவாய்காலில் 2009 இலும் 'காணாமற்போன' நூற்றுக்கணக்கான சிங்களவர்கள் மற்றும் தமிழர்களை ஏன் கொண்டுள்ளன என நீதிமன்றத்தில் விளக்கமளிக்க வேண்டும். தமது கட்டளை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் இடம்பெற்ற வலிந்து காணாமற்போதல்களுக்கு இரண்டு பேருமே சர்வதேச மற்றும் உள்நாட்டுச் சட்டத்தின் கீழ் குற்றவியல் பொறுப்புடையவர்கள் ஆவர். 2009 இல் கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்பு செயலாளராக இருந்தார், சவேந்திரா முக்கிய படைப்பிரிவின் கட்டளைத்தளபதியாக இருந்தர், இவர் தொடர்பான பாரிய மனித உரிமைகள் மீறல்கள்[1] பற்றிய நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகளுக்காக தற்போது அமெரிக்க அரசாங்கத்தினால் தடைவிதிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையினுடைய *காணாமற்போனவர்கள் பற்றிய அலுவலகத்தினால்* (OMP)[2] அண்மையில் வெளியிடப்பட்ட தரவுகளின் படி நாடு அரசாங்கத்தின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் இருந்த போது இறுதிக் கட்டப் போர்[3] இடம்பெற்ற நாட்களில் 'காணாமற்போனதாக' 330 தமிழர்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். கோத்தபாய மாவட்ட இராணுவ இணைப்பதிகாரியாகவும் சவேந்திர சில்வா அவரின் கீழ் இளநிலை அதிகாரியாகவும் பணியாற்றிய 1989 இன் இறுதிக் காலாண்டுப் பகுதியில் 154 சிங்களவர்கள் காணாமற்போனதாக கருதப்படுவதாக இந்தத் தரவுகள் காட்டுகின்றன. காணாமற்போனவர்கள் பற்றிய இந்த அலுவலகத்தின் இந்த எண்ணிக்கைகள் பெரிதாக இருப்பினும் அவை பெரியளவில் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளன என ITJP நம்புகின்றது.

*தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது மற்றும் எங்கு இருக்கின்றார்கள் என்ற உண்மையைக் கண்டறிவதற்கான உரிமை குடும்பங்களுக்கு உண்டு அத்துடன் வலிந்து காணாமற் போதல் என்பது ஒரு குற்றம் ஆகையால் இறுதிப் போர் வன்னியில் இடம்பற்ற போது கட்டளைப் பொறுப்பில் இருந்த இராணுவ அதிகாரிகளும் அத்துடன் யாருடைய பொறுப்பில் கீழ் அவர்கள் சரணடைந்தார்களோ அந்த அதிகாரிகளும் சரணடைந்த நூற்றுக்கணக்கான தமிழர்களை எவ்வாறு தொலைந்து போக விட்டார்கள் என்பதைப் பற்றி விளக்கம் தருவதற்கான சட்ட ரீதியான கடப்பாடு உண்டு* என ITJP இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

*மேலும், 1989 இல் அவர் அங்கு பொறுப்பாக இருந்த போது மாத்தளையில் இருந்து பல சிங்கள இளைஞர்கள் ஏன் காணாமற்போனார்கள் என கோத்தபாய ராஜபக்ச இலங்கை மக்களுக்கு விளக்கமளிக்கப் போகின்றாரா?* என அவர் கேட்டார்.

*அரசாங்கத்தின் இந்தக் காணாமற்போனவர்களின் பட்டியல்கள் இலங்கையின் இராணுவத் தளபதிக்கு எதிராக நூற்றுக்கணக்கானவர்கள் காணாமற்போனமைக்காக தற்போது வழக்கு தொடரப்படமுடியும் என்பதையும் அத்துடன் ஒரு நாள் பதவியில் இருந்த வெளியேறிச் சென்ற பின்னர் ஜனாதிபதிக்கு எதிராகவும் வழக்கு தொடரப்படமுடியும் என்பதையும் காட்டுகின்றன*

---

[1] https://www.state.gov/public-designation-due-to-gross-violations-of-human-rights-of-shavendra-silva-of-sri-lanka-undersection-7031c-of-the-department-of-state-foreign-operations-and-related-programs-appropriations-a/
[2] http://www.ompsrilanka.org/omp-documents/omp-publications
[3] We added those registered from 16-20 May 2009. Noting that there are no Batticaloa figures released.

என சூக்கா மேலும் தெரிவித்தார்.

### *தொலைதல் அல்லது காணாமற்போதல் ?*

காணாமற்போனவர்கள் பற்றிய அலுவலகத்தினால் (OMP) வெளியிடப்பட்டுள்ள பட்டியல்கள் காணாமற்போனவர்களுக்கும் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்குமான சட்டரீதியான வேறுபாட்டை தெளிவற்றதாக்குகின்றது. இராணுவத்தின் காவலில் இருந்து காணாமற்போனவர்களுடன் நடவடிக்கையின் போது காணாமற்போன படைவீரர்கள் மற்றும் இறுதிப் போரின் போது 2009 இல் எறிகணைத் தாக்குதல் சம்பவங்களில் கொல்லப்பட்டு அவர்களின் உடல்கள் ஒருபோதுமே அடையாளங் காணப்படாதவர்களும் ஒன்றாக கலக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறே மாத்தளையில் பொலிஸ் அல்லது இராணுவக் காவலில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கடைசியாக உயிருடன் இருந்தை வெளிப்படுத்தும் விரிவான வாக்குமூலம் உள்ளது. போரில் ஒவ்வொருவரையும் இழப்பது துன்பகரமானது ஆனால் வலிந்து காணாமல்போதல் என்பது தற்போதும் இடம்பெற்றுவரும் ஒரு குற்றமாகும் அதற்கு சர்வதேச சட்டத்தின் கீழ் சட்ட வரம்புகள் எதுவும் கிடையாது. இதற்கு எந்த நேரத்திலும் வழக்குத் தொடர முடியும் ஆனால் வெளியிடப்பட்டுள்ள இந்தப் பட்டியல்கள் இந்த முக்கியமான வேறுபாட்டை தெளிவாக வெளிப்படுத்தவில்லை.

### *காணாமற்போன இடம்*

காணாமற்போனவர்கள் பற்றிய அலுவலகத்தில் இருந்து வெளியிடப்பட்ட பட்டியல்கள் ஒருவர் காணாமற்போன இடம்குறித்தும் சரியாக குறிப்பிட்டுக் கூறவில்லை. இது குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட இடங்களில்[4] கொத்துக் கொத்தாக காணாமற்போதல்கள் இடம்பெறுவதற்கு பொறுப்பாக இருந்தவர்களை அடையாளங்காண்பதற்கான வடிவங்களையும் தெரிந்து கொள்வதைக் கடினமாக்குகின்றது. வடக்கு கிழக்கைச் சேர்ந்த எல்லா மாவட்டங்களிலும் இருந்து தமிழர்கள் மே 2009 இல் வன்னியில் இருந்திருப்பார்கள் அத்துடன் போர் இடம்பெற்ற இறுதிநாட்களில் அவர்களும் காணமாற்போயிருக்கலாம் ஆனால் காணாமற்போனவர்கள் பற்றிய அலுவலகத்தின் தரவுகள் சொந்த மாவட்டங்களின் அடிப்படையில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளமையால் இது போரின் இறுதி நாட்களில் எத்தனை பேர் தொலைந்து போனார்கள் அல்லது காணாமற்போனார்கள் என்பதை அறிந்து கொள்வதை கடினமாக்குகிறது.

### *குறைத்து மதிப்பிடுதல்களும் ஏனைய பட்டியல்களுடனான குறுக்கு குறிப்பிடல்களும்*

வட கிழக்கு[5] மாவட்டங்களுக்காக காணாமற்போனவர்கள் பற்றிய அலுவலகத்தின் பட்டியல்கள் 2009 மே 16 தொடக்கம் 20 இடைப்பட்ட காலப் பகுதியில் 335 பேர் காணாமற்போனதாக காட்டுகின்றது. காணாமற்போனவர்களில் பெரும்பான்மையானவர்கள் வட்டுவாகலில் அல்லது ஓமந்தையில் காணாமற்போயிருக்க சாத்தியம் உள்ளது. காணாமற்போனவர்கள் பற்றிய அலுவலகத்தின் எண்ணிக்கையானது 2018 இல் வெளியிடப்பட்ட ITJP இனுடைய இணையத்தளத்தில்[6] சேகரிக்கப்பட்ட தரவுகளைவிடக் குறைவாக காணப்படுகின்றது. இந்த இணையத்தளமானது இதே காலப்பகுதியில் ஓமந்தை அல்லது வட்டுவாகல் பகுதியில் இராணுவத்தின் காவலில் இறுதியாக உயிருடன் காணப்பட்ட பின்னர் காணாமற்போன 390 பேரின் பெயர்களைக் கொண்டிருந்தது.

உதாரணமாக இரண்டாவது ஜேவிபி கிளர்ச்சி[7] இடம்பெற்றதில் இருந்து மாத்தளை மாவட்டத்தில் காணாமற்போன 235 பெயர்களை காணாமற்போனவர்கள் பற்றிய அலுவலகத்தின் தரவு கொண்டுள்ள அதேவேளையில் வலிந்து இல்லாமல் ஆக்கப்பட்ட அல்லது காணாமற்போனவர்கள் பற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு இதனைவிட நான்கு மடங்கிற்கும் மேற்பட்ட 1178 பெயர்களைக்[8] கொண்டிருந்தது என்பதைக் குறிப்பிடுவதும் பெறுமதியானதாக இருக்கும். கடந்த 30 ஆண்டுகளில் முறைப்பாடு செய்தவர்களில் சிலர் வேறு மாவட்டங்களுக்குச் சென்றிருந்தாலும் அல்லது இறந்திருந்தாலும் கூட இந்த பாரிய வித்தியாசத்திற்கு இது விளக்கமளிப்பதாக இருக்காது. மீண்டும் இது காணாமற்போன இடத்திற்கு இணங்க தரவுகள் காட்டப்பட வேண்டிய தேவையையும் மற்றும் அரசாங்கத்தின் முன்னைய காணாமற்போனவர்களின் பட்டியல்களுடன் குறுக்கு குறிப்பிடுதல்களை மேற்கொள்ளுதல் மற்றும் முக்கோண அளவீட்டினை மேற்கொள்வதன் தேவையையும் சுட்டிக்காட்டுகின்றது.

---

[4] For example, all 95 of those who are missing from the war end (16-20 May 2009) who originated in Kilinochchi District are recorded with their last known address as Kilinochchi. This is illogical as they can't have been in Kilinochchi in May 2009 because the areas was captured by the army in January 2009. The high probability is they are among those subjected to enforced disappearance at Mulllivaikkal by the Sri Lankan Army in the last days of the war.

[5] Minus Batticaloa for which OMP data was not published.

[6] https://disappearance.itjpsl.com/#filter=date:16-052009&lang=english

[7] From 1984 to 2016 = 289 names but 54 are not from this period.

[8] Central Zone – list of pending complaints Matale District 1042 complaints and 136 from the List of Inquired complaints.

*"மாத்தளை பற்றிய கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட தகவல்கள் ஒரு பெரிய விடயத்தின் சிறிய ஒரு பகுதியே"* என இலங்கையில் ஜனநாயகத்திற்கான பத்திரிகையாளர்கள் என்ற அமைப்பினைச் சேர்ந்த பாசனா அபேவர்த்தனா தெரிவித்துள்ளார். *"கடந்த காலக் குற்றங்களின் உண்மையான அளவு பலரும் நினைப்பதைவிடவும் பெரிதாக உள்ளது. பின்னைய காலப்பகுதியிலும் கூடுதலான அக்கிரமங்களை முன்னின்று நடாத்திய அதே குற்றஞ்சுமத்தப்பட்ட குற்றவாளிகள் முழுத் தீவினுடையதும் ஆட்சியாளர்களாக மாறியிருப்பது இலங்கையில் தண்டனையில் இருந்து பாதுகாப்பு வழங்கும் கலாச்சாரம் எவ்வாறு ஆழ வேரூன்றியுள்ளது என்பதை போதியளவில் வெளிக்காட்டுகின்றது."*

***தவறவிடப்பட்டுள்ள தகவல்கள்***

காணாமற்போனவர்கள் பற்றிய அலுவலகத்தின் பட்டியல்களில் சில வெளிப்படையான தவிர்ப்புக்களும் காணப்படுகின்றன. அவர்களுடைய தகவலின் படி 2009 போரின் இறுதி நாட்களில் திருகோணமலையைச் சேர்ந்த எவரும் காணாமற்போகவில்லை. அவ்வாறு நடைபெறுவதற்கான சாத்தியப்பாடு மிகவும் குறைவாகவே உள்ளது. போர் இடம்பெற்ற முழுக்க காலப் பகுதியிலுமே திருகோணமலையில் இருந்து 17 தமிழர்கள் மாத்திரமே காணாமற்போயுள்ளதாக காணாமற்போனவர்கள் பற்றிய அலுவலகம் பட்டியலிடுகின்றது. 06 பேர் பதுளையில் இருந்து காணாமற்போயுள்ளார்கள் என்பதைப் போன்று ஏனைய மாவட்டங்களும் மிகவும் குறைவான பெயர்களையே கொண்டுள்ளன. இது குடும்பத்தவர்கள் பதிவுகளை மேற்கொள்ள முன்வருவதற்கு விருப்பமில்லாமல் இருப்பதைக் காட்டுவதாக இருக்கலாம் ஆனால் இதைக் குறிப்பிட்டுக் காட்டுவது முக்கியமானதாகும்.

கொழும்பில் பெரும் எண்ணிக்கையான காணாமற்போன சம்பவங்கள் பற்றி மனித உரிமைகள் அமைப்புக்களால்[9] அறிவிக்கப்பட்ட 2008-9 காலப்பகுதில் 5 காணாமற்போதல்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளதாக காணாமற்போனவர்கள் பற்றிய அலுவலகம் பட்டியலிடுகின்றது. மிகவும் அதிர்ச்சியான சம்பவங்களில் வலிந்து காணமல்போதல் பற்றிய அடையாள கடற்படை வழக்கான திருகோணமலை 11 இல் காணாமற்போனவர்களின் பெயர்கள் உள்ளன. அரசாங்கத்தின் மற்றைய அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட தரவுகள் காணாமற்போனவர்கள் பற்றிய அலுவலகத்திற்கு தானாகவே வழங்கப்படும் என நினைத்த காணாமற்போன ஒருவரின் உறவினர் காணாமற்பேனவர்கள் பற்றிய அலுவலகத்தினால் அவளுடைய அன்புக்குரியவர் பட்டியலிடப்பட்வில்லை என்பதை அறிந்து மிகவும் மனமுடைந்துள்ளதாக விபரித்தார்.

***ஒரு காத்திருக்கும் விளையாட்டு?***

இலங்கையில் வெளியிடப்படவுள்ள ஒரு புத்தகமானது[10] 2017 இல் இருந்து வடக்கு கிழக்கில் காணாமற்போனவர்களின் 17 இற்கும் மேற்பட்ட உறவினர்கள் இறந்துள்ளார்கள் என தெரிவிக்கின்றது அத்துடன் தமது காணாமற்போன அன்புக்குரியவர்கள் பற்றிய செய்திக்காக காத்திருந்து இறந்த ஒவ்வொரு பெற்றோரைப் பற்றியும் சுருக்கமாக விபரிக்கின்றது. ஒவ்வொரு பெற்றோரும் இறக்கும் ஒவ்வொரு தடவையும் வலிந்து காணாமற்போதல் தொடர்பான பெறுமதியான ஆதாரம் அழிக்கப்படுகின்றது என இந்தப் புத்தகம் சுட்டிக்காட்டுகின்றது.

*"மாத்தளையில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை தவறிழைத்தவர்கள் முற்றுமுழுதாக தண்டனையில் இருந்து பாதுகாப்புடன் பதவிஉயர்த்தப்பட்டு வருகின்றார்கள் இது அவர்கள் ஒருபோதுமே பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படமாட்டார்கள் என்ற வெற்றியுணர்வை தீவிரமாக அவர்களுக்கு ஏற்படுத்துகின்றது அதேவேளையில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் நீதிக்காக இனிமேலும் காத்திருக்கமுடியாது"* என சூக்கா தெரிவித்தார். *"ஜேவிபி கிளர்ச்சி மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டு தண்டனையில் இருந்து பாதுகாப்பு வழங்குவது தீவிரமாக்கப்பட்டு அதன்விளைவாக இன்னுமொரு பாரிய அக்கிரமம் இடம்பெற்ற பின்னர் நீதிக்கான கோரிக்கை நசுக்கப்பட்டது. இவற்றுக்கெல்லாம் குடும்பங்களுக்கு முடிவு வேண்டும் அத்துடன் முன்னோக்கிச் செல்வதற்கு சமூகத்திற்கு உண்மை அவசியமாக தேவைப்படுகின்றது."*

**முற்றும்**

---

9 "A large number of cases have also been reported in Colombo". https://www.hrw.org/report/2008/03/05/recurring-nightmare/state-responsibility-disappearances-and-abductions-sri-lanka

10 THE DEPARTED: While searching for their Forcibly disappeared loved ones. Association for the Relatives of the Enforced Disappearances North & East Provinces.

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT